27
171

உ


இறைவன் துணை

மூதறிஞர். முத்தமிழ்வித்தகர்

திரு. அடிகளாசிரியர் இயற்றிய

# சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அருள்மிகு வடசென்னிமலை திருமுருகன் தோத்திரப்பாமாலை

## பணிநிறைவின் நினைவு மலர்



**அ.நச்சினார்க்கினியன்** எம்.ஏ.,பி.எட்.,

உதவித் தலைமை ஆசிரியர் (உயர்நிலை)

அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி

சின்னசேலம் - 606 201. விழுப்புரம் மாவட்டம்.

செல்: 9003468634

## பெற்றோர் வணக்கம்





தோன்றாத் துணையாய் விளங்கும்

தெய்வத்திருவாளர்கள்

## பெ. அடிகளாசிரியர் - சம்பத்துஅம்மாள்

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துஉகந்தான் மனத்துள்இருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப் புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்அடியோங்களுக்கே.

- திருநாவுக்கரசு சுவாமிகள்

உ
இறைவன் துணை

# சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அருள்மிகு வடசென்னிமலை திருமுருகன் தோத்திரப்பாமாலை

## பணிநிறைவின் நினைவு மலர்


ஆக்கியோன்;

**மூதறிஞர். திரு. அழகளாசிரியர்**

குடியரசுத்தலைவரின் தொல்காப்பியச் செம்மொழி விருது பெற்ற
தமிழ்ப்பேராசிரியர்
சித்தநாதேச்சுரஆதீனம்
குகையூர் - 636 301, விழுப்புரம் மாவட்டம்.



வெளியிடுவோன்:

**அ.நச்சினார்க்கினியன்** எம்.ஏ.,பி.எட்.,
உதவித் தலைமை ஆசிரியர் (உயர்நிலை)
அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி
சின்னசேலம் - 606 201. விழுப்புரம் மாவட்டம்.
செல்: 9003468634


உரிமை: ஆசிரியருக்கு

இலவச வெளியீடு

# மூத்த பிள்ளையார் காப்பு



சென்னி மலைமுருகன் சீரார் திருவடியை
உன்னிப் புகழும் உரையினுக்கு - நன்னர்
மூத்திருப் பிள்ளையார் முன்னின் றருள்புரிந்து
காத்தருள வேண்டும் கனிந்து.



உ
இறைவன் துணை

# ஆக்கியோன். திரு. அழகளாசிரியரின் உரை

(04-02-2004 இல் எழுதப்பட்டது.)

நான் 1910-ஆம் ஆண்டில் - சாதாரண வருடம் சித்திரை மாதம் 5-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ராம நவமியன்று பிறந்தேன். எனக்கு ஏழு வயதாகும் வரை என் தந்தை இருந்தார். எனது சிறிய சகோதரனும் அதன் பிறகு சில ஆண்டுகள் மட்டுமே இருந்தார். இந்த நிலையில் எனது குடும்பத்தார் என்னைப்பற்றி கவலையடைந்து ஒரு சோதிடரிடம் என் சாதகத்தைக்கொடுத்து என் ஆயுள்நிலை பற்றிக்கேட்டனர் அச்சோதிடரும் சாதகத்தை ஆராய்ந்து, சாதனுக்கு ஆயுள் நிலை சரியில்லை என்று கூறிவிட்டார். இதனைக்கேட்ட நான் மிகவும் வருந்தி என்னிடம் இருந்த "கந்தரனுபூதி " என்ற நூலில் உள்ள "நமனைவெல்ல" என்ற ஒருபாடலை நாள்தோறும் படித்து வந்தேன். நான் அதனைப்படித்த முறையாவது;

எங்களூரில் சித்தநாதேச்சுரர் கோவிலில் உள்ள முருகன் முதலாக, ஏழு ஊரில் உள்ள முருகன் திருவுருவத்தை மனதில் தியானித்து அப்பாடலைப் படிப்பேன். அந்த ஏழு ஊரில் ஒன்று வடசென்னிமலை ஆகும். இவ்வாறு என்னுடைய இளமைக்காலத்திலேயே, வடசென்னிமலை முருகனைக் "கந்தரனுபூதி"ப் பாடலைச் சொல்லி வழிபடுவது எனக்கு வழக்கமாய் இருந்தது. முருகன் திருவருளால் நூறாண்டுக்காலம் வாழமுடிந்தது.

அப்பாடலாவது,

"கார்மாமிசை காலன் வரிற்கலபத்
தேர்மாமிசை வந்தெதி ரப்படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே!"

எனவே அன்றிலிருந்து இன்று வரை வடசென்னிமலை முருகனை நினையாத நாள் இல்லை, அந்நினைவைப் பாடலாக வெளிப்படுத்தக் கருதி, வடசென்னிமலை திருமுருகன் தோத்திரப்பாமாலை என்ற பெயரால் இந்நூலை இயற்றினேன்.

*இதனை அன்பர்கள் படித்துப் பயனடைய வேண்டுகிறேன்.*

இங்ஙனம்

**திரு. அழகளாசிரியர்,**

செம்மொழி விருது பெற்ற தமிழ்ப்பேராசிரியர்.

சித்தநாதேச்சுரஆதீனம்,

குகையூர் - 636 301, விழுப்புரம் மாவட்டம்.

உ

இறைவன் துணை

## வெளியிடுவோன் உரை:

உலகம் போற்றும் உயர்பண்பு நிறைந்த தமிழர்கள், தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண விழா, காதணிவிழா, புதுமனைபுகுவிழா போன்ற நிகழ்வுகளில் ஏதேனும் ஒரு சிறந்த தமிழ் நூலினை, விழாவின் நினைவாக வெளியிட வேண்டும் என்பது எனது தந்தையார் திரு. அடிகளாசிரியர் அவர்களின் பேரவாவாகும். எங்கள் குடும்ப விழாக்களில் அவ்வாறு பல நூற்களை வெளியிட்டு அவரது ஆசையினை நிறைவேற்றியுள்ளோம்.

வளர்ந்து வரும் விஞ்ஞானயுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும்மானுடம், இன்றைக்கு மரபுகளைப் பேணுவது என்பது மிகவும் அரிதாகவே உள்ளது. இன்றைக்கு வளருகின்ற தலைமுறையினர் இவற்றைப் படிக்கவும், உணரவும் வாய்ப்புகள் குறைவு என்பதால், அவற்றை நினைவுபடுத்த அவற்றின்படி நாம் வாழ்ந்துகாட்ட வேண்டும், என்ற கருத்தில்,

தமிழால் வாழ்ந்தும், தமிழ்வாழ வாழ்ந்தும், தமிழ் பணியாற்றிய என் தந்தையார் எழுதிய இந்நூலினை வெளியிடுவது எளியவனின் சிறுமுயற்சி ஆகும்.

எனது தாயார் திருமதி. சம்பத்துஅம்மாள் அவர்கள் கள்ளம்கபடம் இல்லாத உள்ளமுடையவர். வஞ்சகம் கொஞ்சமும் அறியாத நெஞ்சம் உடையவர். தமது பிள்ளைகள் அனைவருக்கும் வாழ்வியல் நெறிகளை ஊட்டி வளர்த்தவர். கண்டிப்பு, கட்டுபாடு, கடவுள்பக்தி இவற்றைப் போதித்தவர். மேலும் முருக பக்தியையும் எங்களுக்கு ஊட்டி வளர்த்தார், சதாசர்வகாலமும், முருகா முருகா என்று கூறிக்கொண்டிருப்பார். மேலும் கந்த சஷ்டி கவசத்தை தினமும் ஓதிக் கொண்டேருப்பார்.

அவர் ஊட்டிய முருகநெறி எங்களுக்கு இரத்தத்தோடு கலந்து விட்டது. அதனால் நாங்கள் கிருத்திகை விரதம், சஷ்டி விரதம் முதலியவற்றை தவறாமல் கடைபிடித்து வருகிறோம். குறிஞ்சி நிலக்கடவுளான முருகப்பெருமானை வழிபட்டு நானும், என் குடும்பத்தாரும் பல நலன்களைப் பெற்றுள்ளோம்.

இந்த வகையில் **"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"** என்ற நோக்கில் வடசென்னிமலை முருகன் தோத்திரப்பாமாலை என்ற நூலை எனது பணி நிறைவு காலத்தில் வெளியிடுவதை பெரும்பேறாகக் கருதி, இதனை மற்றவர்களுக்கும் ஆற்றுப்படுத்துகின்றேன்.

**"முன்னிய முடிக்கும் திறலோன்முருக"**- என்ற நக்கீரர் வாக்கின்படி தமிழ்க்கடவுளான முருகப்பெருமானை வழிபட்டு எல்லோரும் எல்லா நலன்களும் பெற வேண்டுகிறேன்.

இங்ஙனம்

**அ. நச்சினார்க்கினியன்**

உ

இறைவன் துணை

# பதிப்புரை

இந்நூலின் முதல் பதிப்பு 13-11-1980 அன்று வடசென்னிமலை முருகன் சன்னதியில், ஆத்தூர் உயர்திரு. சாம்பவசிவரெட்டியார் அவர்கள் தலைமையில் அரங்கேற்றப்பட்டது. அப்போது இதனைமுன்னின்று நடத்தியவர் ஆத்தூர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்த எனது மூத்த சகோதரர். தெய்வத்திரு. அ.பேராசிரியர் ஆவார்.

இரண்டாம் பதிப்பு 04-02-2004 இல் வடசென்னிமலை அருள்மிகு. பாலசுப்ரமணியசுவாமி திருக்கோவில் இராஜகோபுர மஹா கும்பாபிஷேக பெருவிழாவின் போது என்னுடைய தந்தையார் வழிக்காட்டுதலின்படி என்னால் வெளியிடப்பட்டது.

தற்போது மூன்றாம் பதிப்பு என்னுடைய ஆசிரியப் பணிநிறைவு நினைவு மலராக என்னுடைய தந்தையார் ஆசியோடு தமிழ்ப்புத்தாண்டில் 14-04-2016 சித்திரை முதல் நாள் வடசென்னிமலை அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் வெளியிடுவதைப் பெரும்பேறாகக் கருதி, பணிவுடன் அன்பர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

14-04-2016
தமிழ்ஆண்டு-துர்முகி வருடம்
சித்திரை -1.

அன்புடன்

**அ. நச்சினார்க்கினியன்**

உ
இறைவன் துணை



# வடசென்னிமலை திருமுருகன்
# தோத்திரப் பாமாலை

வன்னியிலை நல்லறுகு கொன்றைபிறை முதலான
வளர்சடை அணிந்த பெருமான்
வந்தா தரித்துப் பணிந்துதன் வலச்செவியை
வாயருகு சேர்த்து நிற்ப
மன்னிநிறை மந்திரப் பொருள்செறி திருச்சொலை
மலர்ந்தருளி செய்த குருவே!
மணஞ்செறி குறிஞ்சியும் வெட்சியும் ஆரமும்
மன்னிநின் றழகு செய்ய
கன்னிநிறை மங்கையர் மங்கலப் பாடல்போல்
களியளி இனம்பா டவே.
கண்டவர் மனமெலாம் அமைதியும் இன்பமும்
கடவுளர்க் கன்பும் மல்கும்
சென்னிமலை உறைகின்ற முருகனே! குமரனே!
செந்தா மரைக்கு நிகராம்
சேவடி படர்ந்திடும் செம்மலொடு வந்தனன்
சிறியேற் கிரங்கி அருள்வாய். (1)

---

குறிப்புரை: சிவபெருமான் வந்து ஆதரித்து, பணிந்து தன் செவியை (முருகன்) வாய் அருகு சேர்த்து நிற்ப, அவருக்கு மந்திரச் சொல்லைத் திருவாய் மலர்ந்தருளிய குரு என்று கூட்டுக.

மல்கும் - பெயரெச்சம், மல்கும் சென்னிமலை.

செம்மல் - தலைமை, சேவடியை அடைய வேண்டும் என்ற தலைமையான எண்ணத்துடன், செம்மல் - ஆகுபெயர்.

பொன்னையும், பொருளையும் மிகமிகக் கருதியே

புகழிலாச் செயல்பு ரிந்து

புன்னெறியி லேகியே நன்னெறி மறந்திட்ட

புன்மையேற் கறிவு நல்கித்

தன்னையும் என்னையும் நன்றாய் அறிந்திடத்

தரைமுதற் பொருள்க ளெல்லாம்

தானல்ல யானல்ல எனவே துறந்திடத்

தக்கநிலை தந்தாள் வையோ?

அன்னையும் தந்தையும் அன்புநிறை சுற்றமும்

அரியநற் பொருளும் வீடும்

ஆர்வம்நிறை துணைவரும் அனைவரும் நீயெனும்

அறிவால் உனைப்ப ணிந்தேன்

சென்னிமலை உறைகின்ற முருகனே! குமரனே!

செந்தா மரைக்கு நிகராம்

சேவடி படர்ந்திடும் செம்மலொடு வந்தனன்

சிறியேற் கிரங்கி அருள்வாய். (2)

---

குறிப்பு: தன்னையும், என்னையும் என்றது தான் என்றும் சிவமாகிய பொருளையும், என் என்னும் உயிராகிய பொருளையும்,

தரை முதற்பொருள் - நிலம் முதலான முப்பத்தாறு தத்துவங்கள்.

கன்னலும் செந்நெலும் மாவுடன் தென்னையும்

கலந்துநின் றழகு செய்யக்

காவிரிப் புனல்போல வாரியும் ஓடையும்

கசிந்தூற் றெடுத்து நிற்ப

மின்னையும் வில்லையும் தந்தே முழங்கிடும்

மேகங்கள் மழைபொ ழிதர

மேலான உள்ளம் படைத்திந்த வுலகெலாம்

மிகவாழ்ந் திருக்க அருள்வாய்

புன்னையும் நந்தியும் முத்தென அரும்பிநற்

புகழென மலர்ந்து நிற்ப

பொன்வண்டு முதலான நன்வண்டு மெல்லிசைப்

பொலிவுதோன் றப்பா டிடும்

சென்னிமலை உறைகின்ற முருகனே! குமரனே!

செந்தா மரைக்கு நிகராம்

சேவடி படர்ந்திடும் செம்மலொடு வந்தனன்

சிறியேற் கிரங்கி அருள்வாய் (3)

---

குறிப்பு: வில் - இந்திரவில். நந்தி - நந்தியாவர்த்தம்.
பாடிடும் சென்னிமலை என்று கூட்டுக.

இன்னியம் இயம்பிட அடியவர்தம் நெஞ்செலாம்

எண்ணி எண்ணிக் களியுற

ஈகையை அன்பினைக் கற்றநல் உலகினர்

எங்கும்வந் துணவு நல்க

கன்னியர் கணவனைக் கருதியே வழிபட,

கற்புநிறை மங்கைய ரெலாம்

கந்தனே! உன்னைநிகர் மைந்தனைப் பெற்றிடக்

கருணைசெய் எனத்தொ ழுதிட

பன்னிடும் புலவர்கள் பாவாற் புனைந்திடப்

பாண்புலவர் பண்பா டிட,

பரதவர் நாட்டியம் பண்பாய் விளங்கிடப்

பாவனை காட்டி ஆடச்

சென்னிமலை உறைகின்ற முருகனே குமரனே!

செந்தா மரைக்கு நிகராம்

சேவடி படர்ந்திடும் செம்மலொடு வந்தனன்

சிறியேற் கிரங்கி அருள்வாய் (4)

---

குறிப்பு: நாட்டியம் என்ற சொல்லிற்குக் குறிப்பு என்று பொருள். மனக்குறிப்பு, பண்பாய் விளங்க பாவனை - அபிநயம். இன்னியம், இயம்புதல் முதலியன நிகழ்தற்கு இடமான சென்னிமலை என்று கூட்டுக. பரதவர் - பரத நாட்டியம் செய்வோர்.

# வேறு

உன்னையே உள்ளம் உருகிட உன்னி,

உன்திருப் புகழையே கூறி

உன்திரு வடியில் மலரினைத் தூவி

உன்னையே வழிபடப் பெற்றால்

பொன்னையும் கருதேன், பூமியை விரும்பேன்

பொலந்தொடி மகளிரை நினையேன்

பூமியில் எவர்க்கும் அன்பினைப் பூண்டு

புண்ணியச் செயலையே புரிவேன்

அன்னையே போல அடியவர்க் குதவி

அறிவினைத் தந்தைபோல் உணர்த்தி

அண்ணனே என்ன அருந்துணை யாகி

அரசெனக் குறையினைத் தீர்க்கும்

சென்னிமா மலையில் உறைசிவ முருகா!

சிவையொடு கங்கையின் சிறுவா!

சிவநிலை உணரத் தவநிலை வளரச்

சிறியனேற் கருள்புரி வாயே. (5)

---

குறிப்பு: பொன், பூமி, மகளிர் என்ற மூன்றும் ஏடணாத்திரயம், தீர்க்கும் என்ற பெயரெச்சத்தை முருகன் என்ற பெயருடன் கூட்டுக.

மன்னுற வாழும் மலையவள் மகனே!

மலைமிசை விளங்கிடும் சுடரே!

மலர்மிசைத் தேவும் வழிபட விருக்கும்

மாபெருந் தெய்வமென் பேனோ?

சென்னியிற் பிறையை அணிமகா தேவன்

சேர்ந்துநின் றடிமலர் தொழுது

சிறப்பொடு வணங்கும் உயர்பெருந் தெய்வச்

செம்மல்நீ என்றுரைப் பேனோ?

உன்னைஎவ் வாறு சிறியனேன் உரைப்பேன்?

உளமெலாம் நைந்துநைந் திளக

உரைதடு மாற உடல்மயிர் சிலிர்ப்ப

உருகிடும் அடியவர்க் கமுதே!

சென்னிமா மலையில் உறைசிவ முருகா!

சிவையொடு கங்கையின் சிறுவா!

சிவநிலை உணரத் தவநிலை வளரச்

சிறியனேற் கருள்புரி வாயே! (6)

---

குறிப்பு: மலர்மிசைத் தேவு - பிரமதேவன்

பக்தியுள், உருகும் பத்தி உயர்ந்தது.

உன்னிடத் தொழில்செய் உன்கையில் வேலும்
ஊர்ந்திடற் கினியநன் மயிலும்
உரனெலாம் அழியக் கூவிடு கொடியும்
உன்வழி இயங்குறு கணமும்
என்னிடத் தன்றி, அடியவர்க் கெல்லாம்
இடரினைக் களைந்திடு மென்றால்
எளியனேன் குகனே! சரவண பவனே!
இனியநற் கந்தனே! இறையே!
முன்னிய முடிக்கும் முருகனே! சேயே!
மூத்தநற் பிள்ளையின் இளைஞ!
முதியநற் கிழவ! என்றுனைக் கூறி
முத்தமிழ்ச் சொல்லினாற் புகழ்வேன்
சென்னிமா மலையில் உறைசிவ முருகா!
சிவையொடு கங்கையின் சிறுவா!
சிவநிலை உணரத் தவநிலை வளரச்
சிறியனேற் கருள்புரி வாயே. (7)

---

குறிப்பு: கணம் என்றது நவவீரரையும், இலக்க வீரரையும் குறிக்கும். வேலும், மயிலும், கோழிக் கொடியும், கணமும் என்னும் நான்கும் என்னுடைய இடரைக் களைவதல்லாமல் எல்லா அடியவரின் இடரையும் களையுமென்க.

மூத்த பிள்ளை - விநாயகர், உன்னுதல் - நினைத்தல்

முருகன் மனதால் நினைத்தவுடனேயே வேல் செயற்படுமென்க.

உன்னிடும் மாரன் அழகினை இழித்த

உளமகிழ் குமாரனே ! செவ்வேள் !

உறுதுணை யாக வானவர்க் குதவும்

ஒருவனே ! நூலறி புலவ !

மன்னிடும் அறுவர் போற்றிடும் குழந்தாய் !

மைந்தருள் மைந்தினால் உயர்வோய் !

மாலவன் மருகா ! மலரிடை முருகா !

மங்கையர் கணவனே ! வேலா !

துன்னிடும் செருக்கை அழித்திடும் ஞானத்

தோன்றலே ! தும்பியின் தம்பீ !

துயர்செயும் சூரன் தன்னையே அழித்த

தூயவ ! தெய்வநா யகனே !

சென்னிமா மலையில் உறைசிவ முருகா !

சிவையொடு கங்கையின் சிறுவா !

சிவநிலை உணரத் தவநிலை வளரச்

சிறியனேற் கருள்புரி வாயே. (8)

---

குறிப்பு: உன்னிடும் மாரன் - அழகிற் சிறந்தவனாகக் கருதப்படும். மன்மதன், மாரனை அழகினால் இழிவுறச்செய்த குமாரன்.

பொன்னியின் அருளும் தூய்மையும் தெளிவும்
பொறுமையும் சாந்தமும் அன்பும்
புன்மைசெய் பகைநோ யிலாமையும் நண்பும்
புகழ்மையும் ஈகையும் முயல்வும்
நன்னய முடைய அறத்தொடு பொருளும்
நலம்நிறை கல்வியும் இன்பும்
நாவலர் புகழும் நற்செயல் பலவும்
நன்மனை மக்களும் வாய்ப்ப,
மன்னிய அடியோர் வினைவலர் சிறப்ப
மாண்புடை ஊர்தியை ஊர்ந்து
மாநிலத் தியங்கி, நலம்பல இயற்றும்
மாண்பையே அருளுதல் வேண்டும்
சென்னிநன் மலையில் உறைசிவ முருகா !
சிவையொடு கங்கையின் சிறுவா !
சிவநிலை உணரத் தவநிலை வளரச்
சிறியனேற் கருள்புரி வாயே. (9)

---

குறிப்பு: பொன்னி - திருமகள் சாந்தம் - காமம், குரோதம் முதலியன இல்லாமலிருத்தல்
அடியோர் - வழிவழியாகக் குற்றேவல் செய்பவர்.
வினைவலர் - அன்றாடக் கூலியாட்கள்.

நன்மைசெய் சொல்லால் அசைபெறு சீரும்
நலஞ்செயும் அடிகளும் நண்ண
நசைதரு தொடையும் தூக்கொடு நோக்கும்
நற்பொருள் பாவிடும் பாவும்
முன்மையை உடைய உவமமெய்ப் பாடும்
முற்றிடும் வண்ணமும் அழகும்
முறைமையில் அமைய, நீபொரு ளாக
முதல்வனே ! பாடிட அருளாய்.
தன்மையை உடைய மரங்களும் கொடியும்
தக்கநற் செடிகளும் தழைத்துத்
தகுமுறை பூத்துக் காய்கனி தந்து
தமிழ்மொழிப் பாடல்போல் விளங்கும்
சென்னிநன் மலையில் உறைசிவ முருகா !
சிவையொடு கங்கையின் சிறுவா !
சிவநிலை உணரத் தவநிலை வளரச்
சிறியனேற் கருள்புரிவாயே. (10)

---

குறிப்பு: "பா" என்னும் சொல்லிற்குப் பரந்துட்பட்ட ஓசையினை உடையது என்பர், அது பொருளன்று. அறம், பொருள், இன்பம் என்னும் பொருள்களைப் பாவியதே "பா" ஆதலின் "நற்பொருள் பாவிடும் பாவும்" என்று கூறப்பட்டது. அழகு அம்மை முதலியன. நீ என்றது முருகனை. நீ பொருளாக என்றது முருகனே பாட்டிற்கு பொருளாக என்னுங் கருத்து. தமிழ் மொழிப்பாடலில் தண்பூவும், நறும்பூவும், தேமாங்காயும், புளிமாங்காயும், கூவிளங்காயும், கருவிளங்காயும் அவற்றின் கனியும் உள்ளன. விளங்கும் என்ற பெயரெச்சத்தைச் சென்னிமலை என்ற பெயருடன் கூட்டுக.

## வாழ்த்து

சென்னி மலைவாழ் திருமுருகன்
சீரார் முகமும் திருவிழியும்
சேர்ந்த அடியார் இடர்களையச்
சிறக்கும் திருவார் பேரருளும்
நன்னர் ஊரும் திருமயிலும்
நலஞ்செய் கைவாழ் பேரயிலும்
நாளும் நாளும் குரலெழுப்பி
நாட்டிற் குதவும் திருக்கொடியும்
பன்னும் முருகன் திருவடியைப்
பற்றி உருகிப் பரவசமாய்ப்
பாடிப் புகழ்ந்து பத்திசெயும்
பண்பார் அடியார் திருக்குழுவும்
மன்னிப் பொலிந்து மிகவாழ்க !
மழைகள் பெய்யப் புனல் நிறைய
மாண்பார் பயிரின் வளஞ்சிறப்ப
மலர்ந்து உலகும் வாழியவே ! (11)

மனஉணர் வுடையோன் மனிதன்அம் மனத்தில்
மாசுகள் படிந்திடா வண்ணம்
நனிமிகக் காப்போன் நல்லவன்; அவற்கு
நற்றுணை எதுவெனக் கூறின்?
கனிவுடன் உருகிப் பற்றுதற் குரிய
கடவுள்தன் திருவடி யாகும்
இனியதில் இனிதாம் அத்திரு வடியை
எண்ணுவோர்க் கிடர்வினை யாதே.

"வாழ்க சீர் அடியாரெல்லாம்"

# பிள்ளையார் வணக்கம்



தமிழ் மக்கள் தாங்கள் தொடங்கும் காரியத் தொடக்கத்தில் பிள்ளையாரை வழிபட்டுத் தொடங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவர்கள் பசுஞ்சாணியால் இரண்டு பிள்ளையாரைப் பிடித்து வைப்பதின் கருத்தென்ன? என்பது பலர்க்கும் தெரிவதில்லை. ஒன்று மூத்த பிள்ளையார் (விநாயகர்) மற்றொன்று இளைய பிள்ளையார் (முருகன்) இவ்விருவரையும் கருதி வணங்கும் குழந்தைப் பாடலைக் கீழே காண்க.

1. சின்ன பிள்ளை பெரிய பிள்ளை
   சிவனா ருக்கே சிறந்த பிள்ளை
   அண்ணன் தம்பி இருவர் தம்மை
   அகத்தில் வைத்தே பணிதல் செய்வாம்.
2. தம்பிக் குதவி செய்யும் பிள்ளை
   தந்தை தாயை வணங்கும் பிள்ளை
   தும்பிக் கையைப் பெற்ற பிள்ளை
   துயரம் தீர்க்கும் பெரிய பிள்ளை
3. கலைகள் பலவும் கற்ற பிள்ளை
   கையில் வேலை பெற்ற பிள்ளை
   அலையும் மலையும் படையும் வரினும்
   அச்சம் அறியாச் சின்னப் பிள்ளை.

# வாழ்நாள் நீடிக்கச் (மிருத்யுஞ்சய) செய்யும் மந்திரமும் அதன் தமிழாக்கச் செய்யுளும்

## மந்திரம்

மிருத்யுஞ்சயாய ருத்ராய நீலகண்டாய சம்புவே
அமிர்தேசாய சர்வாய ஸ்ரீமந்மகாதேவாயதே நம:
திரியம்பகம் யசாமகே சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவபந்தனான் முட்சீயம் ஆம்ருதாத்

-மகாநாராயணஉபநிடதம்

## தமிழாக்கச் செய்யுள்

முக்கண்ண முருகுடையோய் உடல்நலத்தை வளர்க்கும்

முதல்வனே பற்றின்றி உனைப்போற்று கின்றேன்.

எக்கண்ணும் இறக்கின்ற துன்பநிலை நீக்கி

இறவாத அமிழ்தநிலை எளியோர்க்கே ஈவாய்.

- திரு. அடிகளாசிரியர்.

# மாலை விளக்கு

(அடிகளாசிரியர்)

நூலைத் திரித்து நெய்தோய்த்து
நுவல்பொன் னகலில் நன்கிட்டே
பாலைக் காய்ச்சிக் கடைந்தெடுத்த
பசுவின் நெய்யை நன்கூற்றி
மாலை ஏற்றுந் திருவிளக்கில்
மனைக்கு விளக்கந் தருகின்ற
சீல முடைய நற்பெண்ணைச்
சேர்ந்தோர் துயரந் தீர்ந்தோரே.

நல்ல அகலில் நறுநெய் திரியமைத்துச்
சொல்லும் சுடரையும் சுமுகாஎன ஏற்றில் - தொல்லுலகில்
உள்ளம் ஒழுங்காம்: ஒளியமையும் நல்ல
பிள்ளையார் கோயில் விளக்கு.

---

இந்த நூலினை சிறந்த முறையில் அச்சிட்ட
**வாழப்பாடி ராஜன் கம்ப்யூட்டர் அச்சகத்தாருக்கும்**
உரிமையாளர் . திரு. **அ. செந்தில்குமார்** M.Com.,
அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்தினையும்
நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பரங்குன்றத்தில் முருகனை வழிபடுவோருக்குச்
செல்வம் பெருகும்.


திருச்செந்தூரில் முருகனை வழிபடுவோருக்கு
வீரம் பெருகும்.

பழனியில் முருகனை வழிபடுவோருக்குப்
புண்ணியம் பெருகும்.

சுவாமி மலையில் முருகனை வழிபடுவோருக்கு
ஞானம் பெருகும்.

திருத்தனியில் முருகனை வழிபடுவோருக்கு
மங்கலம் பெருகும்

பழமுதிர்ச்சோலையில் முருகனை வழிபடுவோருக்குப்
பெறுதற்கரிய நன்மைகள் பெருகும் என்பர்.



நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற்றுப் படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்.

# குடிசை அறிஞருக்குக் குடியரசுத்தலைவர் விருது



இந்தியக் குடியரசின் தலைவர் மேதகு பிரதீபா தேவிசிங் பாட்டில் வழங்கிய
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தொல்காப்பியர் விருது 6.5.2011



இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.

உ

இறைவன் துணை

# நன்றியுரை

நான் கடந்த 19.07.2002 இல் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறையில் வட்டார வளமைய ஆசிரியராக பணி நியமனம் செய்யப்பட்டு, அப்போதைய தமிழக முதல்வரிடம் நேரடியாக நியமன ஆணைபெற்று எனது கல்விப் பணியைத் துவக்கினேன்.

சுமார் நான்காண்டு காலத்திற்குப் பிறகு, அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பணி மாற்றம் செய்யப்பட்டு சமூக அறிவியல் பட்டதாரி ஆசிரியராகப் பணியினைத் தொடர்ந்தேன். என்னுடைய பணிக்காலத்தில் "ஆசிரியப்பணி அறப்பணி-அதற்கு உன்னை அர்ப்பணி" என்ற சான்றோர் வாக்கினை மனதில் பதிய வைத்துக்கொண்டு என்னால் இயன்ற அளவு மாணவர்களுக்கு கல்வி போதித்து வந்தேன். தற்போது **இந்த கல்வியாண்டில் (2015 - 2016) சின்னசேலம் அரசினர் மகளிர்மேல்நிலைப் பள்ளியில் இருந்து மனநிறைவோடும் பெருமிதத்தோடும் பணிநிறைவு செய்கிறேன்.**

நான் பணியில் இருந்தபோது என்னை நெறிப்படுத்தி வழி நடத்திச்சென்ற தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை உயர் அலுவலர்களுக்கும், எனக்கு உறுதுணையாய் இருந்த விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள், மாவட்டக்கல்வி அலுவலர்கள், தலைமை ஆசிரியப்பெருமக்கள், என்னுடன் பணியாற்றிய ஆசிரியச்சான்றோர்கள், அலுவலக நண்பர்கள், மாணவச் செல்வங்கள் ஆகியோர் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இப்படிக்கு

**அ. நச்சினார்க்கினியன்** எம்.ஏ.,பி.எட்.,
உதவித் தலைமை ஆசிரியர் (உயர்நிலை)
அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி
சின்னசேலம் - 606 201. விழுப்புரம் மாவட்டம்.